சுருக்கம்

பள்ளிக் கல்வி – அரசு உதவிபெறும் பள்ளிகள் – சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடரப்பட்ட வழக்கு நீதிப்பேராணை மனு எண்.11481/2008 மற்றும் பிற தொகுப்பு வழக்குகளின் மீது வெளியிடப்பட்ட 15.3.2016ம் நாளிட்ட தீர்ப்பாணையினை செயல்படுத்துதல் – உதவி பெறும் பள்ளிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள ஆசிரியரல்லாதோர் பணியிடங்களில் நியமனம் செய்யப்பட்டவர்களின் நியமனங்களுக்கு ஒப்புதல் அளித்தல் –ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித்(பக6(1)) துறை

அரசாணை ( நிலை) எண்.64

நாள் 03.04.2018
திருவள்ளுவர் ஆண்டு – 2049
ஹேவிளம்பி வருடம், பங்குனி 20

படிக்கப்பட்டவை :

1. அரசாணை(நிலை) எண்.212, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (பி) துறை, நாள் 29.11.2001.
2. அரசாணை (நிலை) எண்.14, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (பி) துறை, நாள் 07.02.2006.
3. அரசுக் கடித எண்.11462/டி2/2006–1, பள்ளிக் கல்வித் துறை, நாள் 26.05.2006.
4. அரசு கடித எண்.8884/டி1/2011–2, பள்ளிக் கல்வித் துறை, நாள் 9.7.2012.
5. அரசாணை (நிலை) எண்.115, பள்ளிக் கல்வித் துறை, நாள் 30.05.2007
6. அரசாணை (நிலை) எண்.189, பள்ளிக் கல்வித்(டி1) துறை, நாள் 29.07.2009.
7. அரசாணை (நிலை) எண்.203, பள்ளிக் கல்வித்(டி1) துறை, நாள் 23.07.2010.
8. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடரப்பட்ட வழக்கு நீதிப்பேராணை மனு (எம்.டி) எண்.11481/08 மற்றும் பிற தொகுப்பு வழக்குகள் சார்ந்து பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை நாள் 15.03.2016.
9. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.33112/டி1/இ4/2013, நாள் 05.12.2013, 03.03.2014, 30.04.2014, 08.05.2015, 27.04.2016 மற்றும் 15.6.2017.

----------

ஆணை:-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி அத்தியாவசிய பதவிகளான ஆசிரியர் (Teacher), மருத்துவர்( Doctor), காவலர் (Police) ஆகிய பணியிடங்களை தவிர்த்து பிற பணியிடங்களை நிரப்ப விதிக்கப்பட்ட பொதுவான தடையாணை, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி விலக்கிக் கொள்ளப்பட்டது. இதனை தொடர்ந்து, அரசுப் பள்ளிகளில் ஏற்படும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் காலிப்பணியிடங்களையும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் உள்ள ஆசிரியர் காலிப் பணியிடங்களையும் நிரப்பிக் கொள்ள அனுமதிக்கப்பட்டது. மேலும், மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஆசிரியரல்லா பணியிடங்கள் நிரப்புவதற்கு விதிக்கப்பட்டத்

“தடையாணையை விலக்கிக் கொள்ள வேண்டிய அவசியம் எழவில்லை” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் காலியாகவுள்ள ஆசிரியரல்லா பணியிடங்களை அதாவது 184 இளநிலை உதவியாளர் பணியிடங்களையும், 140 அலுவலக உதவியாளர் பணியிடங்களையும் நிரப்பிட ஆணையிடப்பட்டுள்ளது. மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஒரு உதவியாளர் கூட இல்லாத 147 அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட 147 இளநிலை உதவியாளர் காலிப் பணியிடங்களையும், அவ்வாறே 237 பள்ளிகளில் 237 அலுவலக உதவியாளர் காலிப் பணியிடங்களையும் நிரப்பிட ஆணையிடப்பட்டது. மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஆசிரியரல்லாத பணியிடங்களுள் இடைநிலை பணிகளான காவலர், தோட்டக்காரர் போன்ற 467 பணியிடங்களை வெளியாட்களைக் கொண்டும் (Out sourcing), இளநிலை உதவியாளர், நூலகர் முதலான 8 பணியிடங்கள் அதாவது (Category) மொத்தம் 485 பணியிடங்களுக்கு அவை நிரப்பப்பட்ட நாள் முதல் முழுநேர ஊதிய விகிதத்தில் அரசு மானியத்துடன் அனுமதியளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேற்கண்ட நிலையில், மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையை எதிர்த்து அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் நிர்வாகத்தால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடரப்பட்ட தொகுப்பு வழக்கின் மீது மேலே எட்டாவதாகப் படிக்கப்பட்ட தீர்ப்பாணையில் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது:-

“ xxxx (ii) Impugned G.Os, namely, G.O.(Ms) No. 115, School Education Department, dated 30.05.2007 and G.O.(MS) No.203, School Education Department, dated 23.07.2010 and Government letter No.8884/D1/2011-2, dated 09.07.2012 are quashed.

(iii) The impugned orders of the DEOs/DEEOs refusing to approve of the appointments of various non-teaching posts in these writ petitions are set aside and the official respondents are directed to approve of those appointments of the non-teaching staff in the Private Aided Schools concerned in these writ petitions and to sanction grant.

(iv) Wherever writ of Mandamus is sought for a direction is issued to the respondents to approve of the appointments of the non-teaching staff in the Private Aided Schools and to sanction grant.

(v) The official respondents are directed to comply with the aforesaid directions within a period of six weeks from the date of receipt of a copy of this order.”

3. இதனையடுத்து பள்ளிக்கல்வி இயக்குநர் மேலே ஒன்பதாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் ஆசிரியரல்லா பணியிடத்தில் பணியாற்றும் அலுவலர்களால் தொடரப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 219–ல், இதுநாள் வரையில் 189 ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு மட்டும் சார்ந்த நியமன அலுவலர்களால் நியமன ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள 30 ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படாமல் நிலுவையில் உள்ளது என்றும், இதைத்தவிர 31.10.2013 நிலவரப்படி அரசு உதவி பெறும் பள்ளிகளில் உள்ள சுமார் 2413 ஆசிரியரல்லாதோர் காலிப்பணியிடங்களை நிரப்புவதற்காக பள்ளி நிர்வாகத்தால் தொடரப்பட்ட வழக்குகளில், சார்ந்த பணியாளர்களுக்கு சாதகமாக தீர்ப்பாணைகள் பெறப்பட்டு, சார்ந்த மாவட்டக்கல்வி அலுவலர்களால் நியமன ஒப்புதல்

அளிக்கப்பட்ட பணியிடங்கள் போக மீதம் இதுநாள் வரையில் சுமார் 716 காலிப்பணியிடங்கள் உள்ளதாகவும், இக்காலிப்பணியிடங்களில் அந்தந்த பள்ளிகளின் நிர்வாகங்களின் மூலம் நிரப்பப்பட்டுள்ளது. எனினும் ஆசிரியரல்லாதோர் பணியிடங்களை நிரப்ப தடையாணை அமலில் உள்ளதால், நியமனத்திற்கு சார்ந்த மாவட்டக்கல்வி அலுவலர்களால் ஏற்பளிக்கப்படாமல் நிலுவையில் உள்ளது எனவும், இதனால் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஆசிரியரல்லாதோர் பணியிடங்களை உடனடியாக நிரப்பவேண்டியது அவசியமாகிறது என்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. மேற்கண்ட நிலையில் பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, மேலே எட்டாவதாகப் படிக்கப்பட்ட, சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடரப்பட்ட வழக்கு நீதிப்பேராணை மனு எண்.11481/2008 மற்றும் பிற தொகுப்பு வழக்கு சார்ந்து 15.3.2016ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணையினை செயல்படுத்தும்பொருட்டு, அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஆசிரியரல்லாத பணியிடங்களை நிரப்புவது சார்ந்து அரசு கவனமுடன் பரிசீலித்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:-

(i) அரசு நிதியுதவி பெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியரல்லாத பணியிடங்களை நிரப்புவது குறித்து பள்ளிக் கல்வி இயக்குநருக்கு தெளிவுரை வழங்கிய அரசுக் கடித எண். 11462/டி2/2006–1, நாள் 26.05.2006 மற்றும் அரசு கடித எண்.8884/டி1/2011–2, நாள் 09.07.2012 ஆகியவற்றை இரத்து செய்து அரசு ஆணையிடுகிறது.

(ii) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், வழக்கு நீதிப்பேராணை மனு (எம்.டி) எண். 11481 / 2008 மற்றும் பிற தொகுப்பு வழக்கு சார்ந்து 15.03.2016–ம் நாளிட்ட தீர்ப்பில் தெரிவித்துள்ளவாறு, அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் அனுமதியளிக்கப்பட்ட ஆசிரியரல்லா பணியிடங்களில் (sanctioned posts) நியமனம் செய்யப்பட்டவர்களின் நியமனங்களுக்கு ஒப்புதல் அளிக்க உரிய அலுவலருக்கு அறிவுறுத்தி அரசு ஆணையிடுகிறது.

(iii) அரசு நிதியுதவி பெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் ஒப்புதலளிக்கப்பட்ட ஆசிரியரல்லா பணியிடங்களை மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப அனுமதிக்கப்பட்ட விதிமுறைகளின்படி மதிப்பீடு செய்து, மிகுதியான பணியிடங்களை திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்டு, அப்பணியிடங்களை, அப்பணியிடங்களில் தற்போது பணிபுரிபவர்கள் ஓய்வு பெற்ற பின்னர் இரத்து செய்யப்பட வேண்டும் என்பதை உறுதிசெய்யுமாறு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

(iv) ஆசிரியரல்லாத பணியிடங்களை நிரப்புவதற்கும், தகுதிவாய்ந்த/உரிய அதிகாரம் படைத்த அலுவலரிடம் அனுமதி பெறும் விதமாக தமிழ்நாடு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள்(ஒழுங்குபடுத்தும்) விதிகள் 1974இல் திருத்தம் செய்யும் பொருட்டும், மேலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணியிடங்கள் மதிப்பீட்டு வழிமுறைகளின்படி மிகுதியாக இருக்கும்நிலையில் அல்லது அரசால் அவ்வப்போது வகுக்கப்படும் வழிமுறைகளை மீறும்நிலையில் அப்பணியிடங்களை திரும்ப எடுத்துக் கொள்ளும் விதமாகவும் மேற்கண்ட விதிகளில் திருத்தம் செய்யப்படும் பொருட்டு தக்க கருத்துருவினை அனுப்புமாறு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

(v) நூலகர், நூலக உதவியாளர், தோட்டக்காரர் மற்றும் நீர் கொணர்பவர் போன்ற பணியிடங்கள் அரசு பள்ளிகளுக்கே ஒப்புதலளிக்கப்படாத நிலையில், அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளிலுள்ள மேற்கண்ட பணியிடங்களை திரும்ப எடுத்துக் கொண்டு, அப்பணியிடங்களில் தற்போது பணிபுரிபவர்கள் ஒய்வு பெற்ற பின்னர் அல்லது பதவி உயர்வு பெற்ற பின்னர், அப்பணியிடங்கள் காலியாகும்பட்சத்தில் அப்பணியிடங்களுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் திரும்பப் பெற வேண்டும் என்றும், ஒப்புதல் அளிக்கப்பட்ட இப்பணியிடங்களை திரும்பப் பெறுவது சார்ந்து, பள்ளியின் பெயர், பதவி ஆகியவற்றை குறிப்பிட்டு, அப்பணியிடங்களில் தற்போது பணிபுரிபவர் ஒய்வு பெற்ற பின்னர் அல்லது பதவி உயர்வு பெற்ற பின்னர் காலியாகும்பட்சத்தில் இப்பணியிடங்களின் ஒப்பளிப்பினை திரும்பப் பெறவும், பணியிடங்களில் பணிபுரிபவர் ஒய்வு பெற்ற நாள் முதல் இதனை நடைமுறைப்படுத்த வேண்டும். இதற்கென அரசளவில் ஆணை வெளியிட வேண்டி தக்க கருத்துருவினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.16284/நிதி(கல்வி–II)/18, நாள் 2.4.2018–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர்,சென்னை 6.
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை–6.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
(பள்ளிக்கல்வி இயக்குநர் வழியாக)
அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள்.
(பள்ளிக்கல்வி இயக்குநர் வழியாக)
அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள்.
(தொடக்கக்கல்வி இயக்குநர் வழியாக)
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
(பள்ளிக்கல்வி இயக்குநர் வழியாக)
மாநில கணக்காயர், சென்னை 18/35.
நகல்
நிதி(கல்வி–II)துறை, சென்னை 9
மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9
இருப்புக்கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.